**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**முன்னிலை :- திரு. எஸ். விஜயகுமார், எம்.ஏ., எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2021ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்குஎண்.828/2018**
**(CNR.No.TNPV02-001603-2018)**

1. பி.பவானி (எ) விஜயகுமாரி
2. மைனர்.புவிக்ஷாஸ்ரீ

மேற்படி மைனருக்கு கார்டியன்
தாயார் 1ம் வாதி பவானி (எ) விஜயகுமாரி

... வாதிகள்

/எதிர்/

ஆர்.பாஸ்கரன் ... பிரதிவாதி

இவ்வழக்கு 21.12.2018 தாக்கல் செய்யப்பட்டு 21.12.2018 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 22.10.2021 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.தாமோதரன் அவர்கள் ஆஜராகியும், மாற்று வழியில் அறிவிப்பு சார்வாகியும் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்புரை**

வாதிகளுக்கு கடந்த கால ஜீவனாம்சத்திற்கும், எதிர்கால ஜீவனாம்சத்திற்கும் சோந்து ரூ.2,82,000க்கும் மற்றும் இதர தொகைகளுக்கும் தீர்ப்பு செய்யும் படியும், பிரதிவாதி தாவா செலவுத் தொகை செலுத்த உத்தரவிடக்கோரியும் இவ்வழக்கு தாக்கல்.

2) <u>வழக்குரையின் சுருக்கம்</u>:-

1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் 30.11.2011 அன்று உளுந்தூர்பேட்டை வட்டம், பெரியசெவலை கிராமத்தில் பெரியசெவலை செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகள் சமுதாய கூடத்தில் இந்து சாஸ்திர சம்பிரதாயப்படி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றும் திருமணத்திற்கு முன்னர் பிரதிவாதியின் பெற்றோர் வாதியை பெண் கேட்டு வந்த போது பிரதவாதி தான் ஒரு பெரிய தினசரி நாளிதழில் பெரிய நிருபர் என்றும் முதலமைச்சர் முதல் மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட கண்காணிப்பாளர் போன்ற பெரிய பதவி அந்தஸ்தில் உள்ளவர்கள் பிரதிவாதிக்கு மிகவும் பழக்கம் என்றும் பிரதிவாதி பிரதி மாதம் ரூ.50,000/- குறையாமல் வருவாய் ஈட்டி வருகின்றார் என்றும் கூறி பெண் கேட்டனர் என்றும், அதற்கு வாதியின் பெற்றோர் தனது மகள் மிகவும் இள வயதுள்ளவர் என்றும் மிகவும் பலவீனமாக உள்ளாரென்றும் தற்போது திருமணம் செய்து கொள்ளக்கூடிய மன பக்குவமோ தனியாக சமையல் செய்யும் அளவிற்கு திறமையோ அவருக்கு கிடையாது என்றும் பிரதிவாதியின் பெற்றோரிடத்தில் தெரிவித்தனர் என்றும் ஆனால் பிரதிவாதியின் பெற்றோர்களோ 1ம் வாதியை தன் சொந்த மகள் போல் வைத்துக்கொள்வதாகவும் அவர்கள் வீட்டில் 1ம் வாதி எந்த வேலையும் செய்ய வேண்டாம் என்றும் நினைத்த நேரத்திற்கு 1ம் வாதி அவரது வீட்டிற்கு சென்று வரலாம் என்றும் பெண் மட்டும் கொடுத்தால் போதும் என்றும் கூறி பெண் கேட்டனர் என்றும் பிரதிவாதியின் பெற்றோரது தேனொழுகும் வார்த்தைகளில் மயங்கிய வாதியின் பெற்றோர் பிரதிவாதிக்கு பெண் கொடுக்க சம்மதித்தனர் என்றும் அதன் அடிப்படையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு திருவெண்ணெய்நல்லூர் கம்பன் திருமண மண்டபத்தில் 25.09.2017ல் 1ம் வாதியின் பெற்றோர் செலவில் நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றும் இந்த நிலையில் நிச்சயம் நடைபெற்ற பின்னர் பிரதிவாதி மற்றும்

அவருடைய பெற்றோர் ஆகியவர்களின் நடவடிக்கைகளில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டு திருமணத்தை மிகவும் விமரிசையாக நடத்த எண்ணியுள்ளதாகவும் அதற்கு கூடுதல் செலவு ஆகும் என்பதால் திருமணச்செலவிற்கு தனியாக ரூ.5,00,000/- வேண்டுமென பிரதிவாதியின் பெற்றோர் நிர்பந்தம் காரணமாக 1ம் வாதியின் பெற்றோர் ரூ.3,00,000/- பிரதிவாதிகளின் பெற்றோர்களிடம் அளித்தனர் என்றும் இந்த நிலையில் பிரதிவாதியின் பெற்றோர்களது நிர்பந்தம் காரணமாக அவர்கள் கோரியவண்ணம், 1ம் வாதிக்கு திருமணத்தின் போது சீர்வரிசையாக 25 பவுன் நகையும் பிரதிவாதிக்கு 6 பவுன் தங்க சங்கிலியும் மற்றும் பண்டபாத்திரங்கள் கட்டில் பீரோ மற்றும் ரெஃப்ரிஜிரேட்டர், வாஷிங் மிஷின் உட்பட ரூ.2,00,000/- மதிப்பிற்கும் மற்றும் ரூ.1,00,000/- மதிப்புள்ள இரண்டு சக்கர வாகனமும் வாங்கி தந்தனர் என்றும் அதுவல்லாமல் திருமணத்திற்கு பிறகு பிரதிவாதி 1ம் வாதியுடன் சுமூகமாக மூன்று மாத காலம் மட்டுமே குடும்பம் செய்து வந்தார் என்றும் இந்த நிலையில் பிரதிவாதியின் தாயார் 1ம் வாதியை எந்த நேரமும் கடுஞ்சொற்களால் திட்டிக்கொண்டும் 1ம் வாதியின் வீட்டில் செய்த சீர்வரிசைகள் போதவில்லை என சதா குறை சொல்லிக்கொண்டும், 1ம் வாதியே அனைத்து வேலைகளையும் செய்யவேண்டும் என்று கூறியும் 1ம் வாதியை கொடுமை செய்து வந்தார் என்றும் 1ம் வாதி அவரது வீட்டில் செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்த நிலையில் பிரதிவாதியின் தாயாரின் நடவடிக்கை 1ம் வாதிக்கு மிகுந்த மன உலைச்சலையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்தியது என்றும் பிரதிவாதியும் அவரது மனைவியாகிய 1ம் வாதியிடம் ஆதரவாக நடந்துகொள்ளாமல் அவரது பெற்றோர்களுக்கு ஆதரவாகவே நடந்து கொண்டார் என்றும் 1ம் வாதியை அவரது தாயாருடன் அலைபேசியில் பேசுவதற்கு கூட பிரதிவாதியிடம் அவரது பெற்றோரும் அனுமதிப்பதில்லை என்றும் அதனால் 1ம் வாதி மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளானார் என்றும் அதுவல்லாமல் 1ம் வாதிககு

பிரதிவாதி வீட்டில் உரிய உணவு அளிக்காமல் பட்டினி போட்டனர் என்றும் இதன் காரணமாக 1ம் வாதி மிகவும் உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானார் என்றும் அதனால் கருவுற்றிருந்த 1ம் வாதிக்கு சரியான நேரத்தில் உணவு வழங்காததால் வலிப்பு போன்ற நோயினால் பாதிக்கப்பட்டார் என்றும் இது குறித்து கேள்வியுற்ற 1ம் வாதியின் பெற்றோர் பிரதிவாதி வீட்டிலிருந்து 1ம் வாதியை அழைத்துச்சென்று சிகிச்சை அளித்தனர் என்றும் இந்த நிலையில் 1ம் வாதி கருவுற்றது குறித்து பிரதிவாதி ஒரு சில சந்தேகங்களை எழுப்பினார் என்றும் அதுவும் பிரதிவாதி 1ம் வாதி கருவுற்ற பின்னர் 13.01.2018 அன்று திருநாவலூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச்சென்றார் என்றும் அங்கு தாய் சேய் நல அட்டையில் 1ம் வாதி கருவுற்றதற்கு எப்பொழுது மாத விலக்கு ஏற்பட்டது என்ற விபரம் கோரிய விபரத்தில் கடைசி மாத விலக்கான தேதி என்ற காலத்தில் 04.11.2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேலும் எதிர்பார்க்கப்படும் பிரசவ நாள் என்ற காலத்தில் 11.08.2018 என்றும் குறிப்பிட்டுள்ளதை பிரதிவாதியும் அவரது பெற்றோரும் தவறுதலாக கற்பனை செய்துகொண்டு பிரதிவாதி 1ம் வாதிக்கு கரு உண்டானதை சந்தேகக்கண்ணோடு பார்க்கத் துவங்கி ஒரு தவறான தகவலுடன் 1ம் வாதிக்கு பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் 23.03.2018 நாளிட்டு ஒரு நோட்டீஸ் அனுப்பினார் என்றும், விழுப்புரம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி 1ம் வாதியுடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி H.M.O.P.44/2018 தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனால் தற்போது அதன் புகைப்பட நகலை 1ம் வாதி இத்துடன் தாக்கல் செய்கிறார் என்றும் மேற்படி நோட்டீஸில் குறிப்பிட்டுள்ள விபரங்களில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட விபரங்களை தவிர மற்றவைகளை 1ம் வாதி மறுத்து உரிய விளக்கத்துடன் ஒரு பதில் அறிவிப்பினை 1ம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் 10.04.2018ல் அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பின் அசலை

விழுப்புரம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி H.M.O.P.44/2018 தாக்கல் செய்த மனுவுடன் 1ம் வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனால் தற்போது அதன் புகைப்பட நகலை 1ம் வாதி இத்துடன் தாக்கல் செய்கிறார் என்றும் இந்த நிலையில் 1ம் வாதிக்கு பிரதிவாதி ஒரு தவறான தகவலுடன் நோட்டீஸ் அனுப்பியதால் 1ம் வாதி உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 24.03.2018 அன்று ஒரு புகார் கொடுத்தார் என்றும் மேற்படி புகாரை பெற்றுக்கொண்ட அணைத்து மகளிர் காவல் ' நிலையத்தார் பிரதிவாதியையும் அவரது பெற்றோர்களையும் வரவழைத்து விசாரணை செய்து பின்னர் பிரதிவாதி 15.04.2018ல் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளருக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி கடிதத்தில் " எனது மனைவி என் மீதும் எனது குடும்பத்தார் மீதும் கொடுத்த புகாரின் அடிப்படையில் இன்று அழைத்து விசாரணை செய்தீர்கள் அதில் எனது மனைவிக்கு பிரசவம் வரையில் அவரது தாய்வீட்டில் ஸ்வத்து மருத்துவம் பார்த்து பிரசவம் ஆகும் வரை அவர்களது வீட்டிலே எனது மனைவி பவானி இருக்க வேண்டியது என்றும் வாரம் மூன்று முறை நான் எனது மனைவியை அவரது தாய் வீட்டிற்கு சென்று பார்த்து வரவேண்டும் என்றும் பேசி முடிக்கப்பட்டது என்றும் அதன் படிக்கு நான் கட்டுப்பட்டு இதில் கையொப்பம் செய்கிறேன் " என்று சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் இந்த நிலையில் பிரதிவாதி அவரது பெற்றோருடன் வந்து அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்துவிட்டு வந்த பிறகு ஒரு நாள் கூட 1ம் வாதியை சந்திக்கவுமில்லை, பேசவுமில்லை என்றும் வாதி பிரதிவாதியின் அலைபேசிக்கு போன் செய்தாலும் போனை எடுப்பதில்லை என்றும், மேற்படி பிரதிவாதி அவருடைய பெற்றோர்கள், சகோதரி மற்றும் உறவினர்களின் துர்போதனையால் 1ம் வாதியுடன் சேர்ந்து வாழாமல் தனித்து

வாழ்ந்து வருகிறார் என்றும், கடந்த 15.03.2018 முதல் 1ம் வாதி தாம்பத்திய வாழ்க்கை பாதிக்கப்பட்டு மன உலைச்சலும், மன வேதனையும் ஏற்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி இந்த 1ம் வாதியுடன் சேர்ந்து வாழ மறுப்பதற்கு எந்தவித சட்டரீதியான நியாயமும் கிடையாது என்றும் இது சம்மந்தமாக 1ம் வாதி விழுப்புரம் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி 1ம் வாதியுடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி H.M.O.P.No.44/2018 தாக்கல் செய்து அதில் பிரதிவாதி கடந்த 27.07.2018ல் தனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி உள்ளார் என்றும் இந்த நிலையில் 1ம் வாதிக்கு கடந்த 22.08.2018 அன்று 2ம் வாதியான பெண் குழந்தை ஸ்ரீமணக்குல விநாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிறந்தது என்றும் மேற்படி குழந்தை பிறந்த தகவலை 1ம் வாதியின் பெற்றோர் பிரதிவாதிக்கும் அவருடைய பெற்றோக்கும் தகவல் கொடுத்தனர் என்றும் ஆனால் நாளதுவரை பிரதிவாதி 1ம் வாதியையோ 2ம் வாதியான பெண் குழந்தையையோ வந்து பார்க்கவில்லை என்றும் இந்த நிலையில் 1ம் வாதி உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் இன்றி மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும் பிரதிவாதிக்கு சொந்தமாக ஐந்து ஏக்கர் நிலமும் மோட்டார் பம்பு செட் மற்றும் பிரதிவாதி உளுந்தூர்பேட்டை வட்டம் துலங்கம்பட்டு பஸ் நிறுத்தம் அருகில் K.P.R. டிராவல்ஸ் ஒன்றையும் நடத்தி வருகிறார் என்றும் அதில் கார்கள், மினி லாரிகள், டிராக்டர்கள் ஆகியவை சொந்தமாக வைத்துக்கொண்டு வாடகைக்கு விட்டு நல்ல சம்பாத்தியம் செய்து வருகிறார் என்றும் அதனால் பிரதிவாதிக்கு எல்லாம் செலவும் போக வருடம் ஒன்றுக்கு சுமார் ஐந்து லட்சத்திற்கு மேல் வருமானம் வரும் என்றும் 1ம் வாதிக்கு பிரதிவாதி கணவர் என்ற முறையில் அவருக்கு வாழ்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.8,000.00மும் ஆண்டு ஒன்று துணிமணிகள், மருத்துவச்செலவு மற்றும் வீடு வாடகை ஆகியவற்றிற்கு ரூ.25,000/-மும் மற்றும் 2ம் வாதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/-மும் ஆண்டு ஒன்றுக்கு

துணி மணிகள், மருத்துவச் செலவு ஆகியவற்றிற்கு ரூ.25,000/-மும் பிரதிவாதி வழங்கவேண்டியது அவருடைய கடமையாகும் என்றும் இந்த நிலையில் 1ம் வாதி 24.03.2018ல் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழவைக்கக்கோரி கொடுத்த மனுவை பெற்று அதற்கான இரசீதும் வழங்கி உள்ளனர் என்றும் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சமாதான நடவடிக்கையில் சமரசம் ஏற்பட்டும் பிரதவாதியுடன் 1ம் வாதி சேர்ந்து வாழ முயற்சித்தும் பலனில்லை என்றும், அதனால் 1ம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் 21.07.2018ல் ஜீவனாம்சம் கோரி நோட்டீஸ் அனுப்பினார் என்றும் அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி 04.08.2018 நாளிட்ட ஒரு பதில் அறிவிப்பினை அவரது வழக்கறிஞர் மூலம் 1ம் வாதிக்கு அனுப்பியதாக குறிப்பிட்டு 1ம் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பி வைத்தார் என்றும் மேற்படி பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விபரங்களில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட விபரங்களை தவிர மற்றவைகளை இந்த 1ம் வாதி மறுக்கிறார் என்றும் மேலும் அதில் சொல்லியுள்ள விபரங்களும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் ' மேற்படி 1ம் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய நோட்டீஸையும் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பையும் 1ம் வாதி இத்துடன் தாக்கல் செய்கிறார் என்றும் இந்த நிலையில் வாதிகளை பிரதிவாதி வைத்து பாதுகாக்காததாலும் ஜீவனத்திற்கு வழிவகை செய்யாததாலும் தற்பொழுது 1ம் வாதியுடன் பிரதிவாதி சேர்ந்து வாழாததாலும் 1ம் வாதி எந்தவித வருமானமும் இன்றி தன்னுடைய பெற்றோரிடன் பாதுகாப்பில் மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும் பிரதிவாதியும் தற்பொது மோசமான குடிப்பழக்கமும் மற்றும் பல முறைகேடான உறவு ஏற்படுத்திகொண்டுள்ளதாலும் வாதிகளை பிரதிவாதி வைத்து வாழாததாலும் 1ம் வாதி தன்னை பராமரித்துக்கொள்ளவும் தான் கருவுற்ற

நிலையில் பிரசவத்திற்கு உரிய மருத்துவ வசதிக்கு பிரதிவாதி ஏற்பாடு செய்யாததாலும் வாதிகளை பராமரித்துக்கொள்ள வேண்டிய சுமாரான வசதிகள் கூட பிரதிவாதியால் செய்து கொடுக்க முடியாத நிலையில் 1ம் வாதியின் பெற்றோர்கள் 1ம் வாதிக்கு ஏற்பட்ட பிரசவ செலவுகளை கவனித்து வந்தனர் என்றும் தற்போதும் வாதிகள் 1ம் வாதியின் பெற்றோரின் பாதுகாப்பில் தான் இருந்து வருகிறார்கள் என்றும் எனவே வேறுவழியின்றி வாதிகளுக்கு பிரதிவாதியிடமிருந்து ஜீவனாம்சம் கோரி 1ம் வாதி தனக்காகவும் தன்னுடைய குழந்தையான 2ம் வாதிக்காகவும் சமூகம் நீதிமன்றத்தில் இந்த தாவாவை தாக்கல் செய்கிறார் என்றும் கூறி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை மாற்று வழியில் சார்வாகியும் அவரை 18.07.2019 அன்று அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச படுத்தப்பட்டார்.

4. வாதிகள் தரப்பில் 1ம் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையான சான்றாவணங்கள் குறியீட்டுள்ளார். வா.சா.2 ஆக 1ம் வாதியின் தந்தை முருகன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சனை

இவ்வழக்கில் வாதிகள் கோரிய படி தாவா பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா அல்லது இல்லையா?_என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

6. <u>தீர்வு :-</u>

வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா பிராது சங்கதிகளை வாதிகள் தகுந்த சாட்சியங்கள் மூலம் மெய்ப்பித்துள்ளார்கள் என்றும் பிரதிவாதி ஒருதலைப்பட்சம் ஆகிவிட்டார் என்றும் வாதிகள் தங்கள் வழக்கை வா.சா.1, வா.சா.2 சாட்சியங்கள் மூலம் மெய்பித்துள்ளார்கள் என்று கூறி தாவா படி தீர்ப்பாக உத்தரவிடுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதிகள் தரப்பு வாதமும் வழக்கு ஆவணங்களும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/1ம் வாதி தாவா பிராது சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2/1ம் வாதியின் தந்தையும் வா.சா.1 சாட்சியத்துக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. வா.சா.ஆ.1 திருமண அழைப்பிதழ் மூலம் 1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் திருமணம் 30.11.2017 அன்று நடைபெற்றிருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

10. வா.சா.ஆ.2 ஆதார் அட்டை மூலம் 1ம் வாதி பிராது முகவரியில் வசித்துக்கொண்டிருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

11. வா.சா.ஆ.3 பிறப்பு சான்றிதழ் மூலம் மேற்படி 1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் புவிக்ஷாஸ்ரீ என்ற 2ம் வாதி ஆகிய பெண் குழந்தை 22.08.2018 அன்று பிறந்திருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

12. வா.சா.ஆ.4 அறிவிப்பு மூலம் பிரதவாதி தனது வழக்கறிஞர் மூலம் 1ம் வாதிக்கு விவாகரத்து கோரி அறிவிப்பு அனுப்பியிருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

13. வா.சா.ஆ.5 பதில் அறிவிப்பு மூலம் மேற்படி வா.சா.ஆ.4 அறிவிப்புக்கு 1ம் வாதி வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

14. வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 அஞ்சல் ஒப்புதல் அட்டை மூலம் மேற்படி பதில் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டிருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

15. வா.சா.ஆ.9 பதில் அறிவிப்பு மூலம் பிரதிவாதி வாதிகளின் வழக்கறிஞருக்கு பதில் அனுப்பி இருப்பது புலப்படுகிறது.

16. வா.சா.ஆ.10 பதிவு அஞ்சல் உறை மூலம் வாதிகளின் வழக்கறிருக்கு பிரதிவாதியின் வழக்கறிஞர் பதிவு அஞ்சல் அனுப்பியிருப்பது புலனாகிறது.

17. வா.சா.ஆ.11 மனு மூலம் 1ம் வாதி பிரதீவாதிக்கு எதிராக சேர்ந்து வாழ கோரி எச்.எம்.ஓ.பி.44/2018 வழக்கு தாக்கல் செய்திருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

18. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.16 கிரைய பத்திரங்கள் மூலம் பிரதிவாதி பேரில் அசையா சொத்துக்கள் இருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

19. வா.சா.ஆ.15, வா.சா.ஆ.16 சிட்டா மூலம் பிரதிவாதி பேரில் அசையா சொத்துக்கள் பட்டாவாகி இருப்பது வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

20. பிரதிவாதி தரப்பில் தாவா பிராதை மறுத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி வா.சா.1, வா.சா.2 சாட்சியங்களையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 சான்றாவணங்களையும் குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. பிரதிவாதி தனது அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு சங்கதிகளை சாட்சியங்கள் மூலம் மெய்ப்பிக்கவில்லை. அதனால் வாதிகள் தங்கள் வழக்கை பிரதிவாதிக்கு எதிராக சாட்சியங்கள் மூலம் மெய்ப்பித்துள்ளார்கள்.

21. மேற்படி சாட்சியங்களின் மூலம் வாதிகள் தங்களை பராமரிப்பதற்கும் ஜீவனத்திற்கும் வழி இல்லாமல் கஷ்ட பட்டு வருவதும் பிரதிவாதி வாதிகளை நியாயமான காரணம் இன்றி பராமரிக்காமல் கைவிட்டு இருப்பதும் வாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

22. மேலே கண்ட காரணங்களினால் வாதிகள் தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இவ்வழக்கில் வாதிகள் கோரிய படி எதிர்வாதிக்கு எதிராக தாவா கடந்த கால ஜீவனாம்சம் மற்றும் எதிர்கால ஜீவனாம்ச தொகையான ரூ.2,82,000/-ஐ வாதிகள் பெறும்வகையில் செலவுத் தொகையுடன் தாவா தீர்ப்பு செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, இவ்வழக்கில் வாதிகள் கோரிய படி எதிர்வாதிக்கு எதிராக தாவா கடந்த கால ஜீவனாம்சம் மற்றும் எதிர்கால ஜீவனாம்ச கூட்டுத் தொகையான ரூ.2,82,000/-ஐ வாதிகள் பெறும்வகையில் செலவுத் தொகையுடன் தாவா தீர்ப்பு செய்யப்படுகிறது. எதிர்வாதி மேற்படி

ரூ.2,82,000/- இரண்டு மாத காலத்திற்குள் 1ம் வாதியிடம் செலுத்திபோக உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 02.12.2021 வியாழக்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1. திருமதி.பவானி (எ) விஜயகுமாரி (1ம் வாதி)

வா.சா.2 திரு.முருகன்

**வாதிகள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ1 | 30.11.2017 | 1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் நடந்த திருமண அழைப்பிதழ்(அசல்) |
| வா.சா.ஆ.2 | - | 1ம் வாதி ஆதார் அட்டை நகல் (அசல் ஆஜர்படுத்தப்பட்டு ஒப்புமை செய்யப்பட்டு சரி என ஒப்புககொள்ளப்பட்டது. |
| வா.சா.ஆ.3 | 14.09.2018 | 2ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் (அசல்) |
| வா.சா.ஆ.4 | 23.03.2018 | பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் 1ம் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் (நகல்) |
| வா.சா.ஆ.5 | 10.04.2018 | 1ம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு (நகல்) |
| வா.சா.ஆ.6 | 21.07.2018 | 1ம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | 26.07.2018 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அசல் ஒப்புதல் அட்டை |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 28.07.2018 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அசல் ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.9 | 04.08.2018 | பிரதிவாதியின் வழக்கறிஞர் 1ம் வாதியின் முகவரியிட்டு 1ம் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.10 | - | 1ம் வாதி வழக்கறிஞருக்கு பிரதிவாதி வழக்கறிஞர் அனுப்பிய பதிவு அஞ்சல் உறை |
| வா.சா.ஆ.11 | - | 1ம் வாதி விழுப்புரம் 2வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கூறி எச்.எம்.ஓ.பி நெ.44/2018 வழக்கில் தாக்கல் செய்த மனு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.12 | 29.12.1990 | பிரதிவாதி பெயரில் சொத்து இருப்பதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல்(ஆவண எண்.157/ 1991 திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.13 | 25.01.1993 | பிரதிவாதி பெயரில் சொத்து இருப்பதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல்(ஆவண எண்.317/ 1993 திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.14 | 28.01.1993 | பிரதிவாதி பெயரில் சொத்து இருப்பதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல்(ஆவண எண்.85/ 1993 திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.15 | 17.07.2018 | பிரதிவாதி பெயரில் உள்ள கணிணி சிட்டா ('பட்டா எண்.65) |
| வா.சா.ஆ.16 | 17.07.2018 | பிரதிவாதி பெயரில் உள்ள கணிணி சிட்டா (பட்டா எண்.225) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணம்</u>**

(இல்லை)

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.